பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 04 2025 **SATURDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மின்னணு சாதனங்களின் உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்துள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்த நேரடி ஒளிபரப்பை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

3. முன்னாள் சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 30 ஆயிரம் ரூபாயிலிருந்து, 35 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. துனிஷியா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah – Manav Thakkar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<>>>>>

நாட்டில் மின்னணு சாதனங்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மின்னணு சாதன உற்பத்திக்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளையும், அதற்கான இணையதளத்தையும் அவர் தொடங்கிவைத்து பேசினார்.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள் தொழில்துறை பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த பின்பே இறுதி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

மின்னணு சாதன விநியோகத்தில் சுயசார்பு நிலையை எட்டும் வகையில், 22 ஆயிரத்து தொள்ளாயிரத்து 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த பத்தாண்டுகளில் மின்னணு சாதனங்களின் உற்பத்தி ஐந்து மடங்காகவும், அதன் ஏற்றுமதி ஆறு மடங்காகவும் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

மின்னணு சாதனங்களை வடிவமைப்பதற்கான குழுவை தொழில்துறையினர் உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள் காரணமாக, இத்துறையில் 59 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும், கூடுதலாக 91 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புப்படைகளின் செயல்பாடுகள் குறித்த நேரடி ஒளிபரப்பை தவிர்க்க வேண்டும் என்று அனைத்து ஊடகங்களுக்கும், மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஊடகங்கள், டிஜிட்டல் வலைதளங்கள், தனி நபர்கள் ஆகியோர் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான தகவல்களை முன்கூட்டியே ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்துவது பாதுகாப்புப்படையினரின் செயல் திறனை பாதிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேபிள் தொலைக்காட்சி, நெட்வொர்க் திருத்த விதிகளின்படி, பாதுகாப்புப்படையினரின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்பு தடை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 30 ஆயிரம் ரூபாயிலிருந்து, 35 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இன்று பேரவையில் இதனை தெரிவித்த முதலமைச்சர், இந்த உயர்வு ஏப்ரல் ஒன்றாம் தேதிமுதல் வழங்கப்படும் என்று கூறினார்.

முன்னாள் உறுப்பினர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் 15 ஆயிரம் ரூபாயிலிருந்து, 17 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறினார்.

இதேபோல், முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மருத்துவப்படி, 75 ஆயிரம் ரூபாயிலிருந்து, ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கான விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னரே, எஞ்சியுள்ள 25 ஆயிரம் ரூபாய்க்கான மருத்துவப்படி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மதுராந்தகம், அரக்கோணம், சீர்காழி உள்ளிட்ட ஆறு இடங்களில் புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள் கட்டப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று, இதுதொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், அரசு தணிக்கையாளர்களின் தொழில்முறை மேம்பாட்டிற்காக 50 லட்சம் ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்படும் என்று கூறினார்.

அனைத்து தணிக்கை இயக்ககங்களுக்கும் பொதுவான சட்ட உதவி மையம் அமைக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் மறைவுக்கு தமிழக சட்டப்பேரவையில் இன்று இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பேரவைத் தலைவர் திரு அப்பாவு இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்.

மிக சிறந்த அறிவியலாளரும், உயரிய பொறுப்புகளை வகித்தவருமான கஸ்தூரி ரங்கன், பல்வேறு விருதுகளை பெற்றவர் என்றும் புகழாரம் சூட்டினார்.

கஸ்தூரி ரங்கன் குடும்பத்தினருக்கும், அறிவியலாளர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு அப்பாவு தெரிவித்தார்.

இதனையடுத்து, இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

<<<<<<>>>>>

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே நேரிட்ட பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்தினருக்கு, தலா நான்கு லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்றும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனிடையே, இந்த சம்பவம் தொடர்பாக, பட்டாசு ஆலையின் மேலாளர் உட்பட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 14 தமிழக மீனவர்கள், இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சி மடத்தை சேர்ந்த மூன்று மீனவர்களும், ராமேஸ்வரத்தை சேர்ந்த 11 மீனவர்களும் தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

முன்னதாக, இலங்கை அரசுடன் மத்திய — மாநில அரசுகள் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின்னர், விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 48 செகண்ட்ஸ்)*

இதனிடையே, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சுற்றுவட்டாரப்பகுதிகளில் சுமார் ஒருமணிநேரம் பெய்த கனமழை காரணமாக, சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்த நான்கு பேரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் நிவாரண நிதியை மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று நேரில் வழங்கினார்.

---------------

பெரம்பலூர் மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கும் பணியினை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் தொடங்கிவைத்தார்.

-----------------

புதுக்கோட்டை மாவட்ட அளவிலான தூய்மைக்குழு உறுப்பினர்களின் முதல் ஒருங்கிணைப்புக்கூட்டம் ஆட்சியர் திருமதி அருணா தலைமையில் நடைபெற்றது.

-----------------

திருப்பத்தூர் மாவட்ட வனத்துறை மற்றும் நீதித்துறை சார்பில் மரக்கன்றுகள் நடும் பணியினை ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி தொடங்கிவைத்தார்.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் கள்ளச்சாரயம் தொடர்பான குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவடட காவல் கண்காணிப்பாளர் திரு ராஜேஷ் கண்ணன் எச்சரித்துள்ளார்.

-----------------

அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரியில் பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட முதன்மை நீதிபதி மலர் வாலண்டினா தலைமையில் நடைபெற்றது.

--------------

திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு ரெங்கநாதர் திருக்கோவில் தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah – Manav Thakkar** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 11-6, 11-8, 11-6 என்ற செட் கணக்கில், துனிஷியாவின் **Wassim Essid** – நெதர்லாந்தின் **Remi Chambet** இணையை வென்றது.

---------------

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Zeel Desai** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-0, 4-6, 6-3 என்ற செட் கணக்கில், ஆஸ்திரியாவின் **Arabella Koller**–ஐ வென்றார்.

--------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று கொல்கத்தா அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்றிரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

----------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் தேசிய அளவிலான அம்பு எறிதல் சாம்பியன் போட்டி நடைபெற்றது.

இதில் நூறு வில்வித்தை வீரர்கள் பங்கேற்றனர்.

**<<<<<<END>>>>>**